பக்கங்கள்:15 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 09 சனிக்கிழமை 22.01.2022 கதிர் 78

**இனி அது ரகசியம் அல்ல!**

அரசியல் வேறு, இராணுவச் செயற்பாடு வேறு. ஆனால் இரண்டுக்கும் பொதுவான சில விடயங்கள் உண்டு. அதில் ஒன்றுதான் – ஒரே சமயத்தில் பல யுத்த முனைகளைத் திறக்கக் கூடாது என்பது.

இந்த விடயமும் பக்கம்02

## யாழ் சர்வதேச வர்த்தக சந்தை ஆரம்பம்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 12 ஆவது தடவையாக நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றத்தின் தலைவர் நந்தரூபன் மற்றும் விக்னேஷ் ஆகியோரின் பங்கேற்புடன் எல்.ஈ.சி.எஸ் (LECS) நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன தர்மதாஸ தலைமையில் வர்த்தக சந்தை ஆரம்பித்து வைக்கப்பட்டது. 10



# கிளிநொச்சியில் எரிந்த நிலையில் தாயும், மகளும் சடலங்களாக மீட்பு!

## தற்கொலையா? கொலையா? எனப் பொலிஸார் தீவிர விசாரணை

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி, ஜனவரி 22

கிளிநொச்சி, புன்னைநீராவிப் பகுதியில் தீயில் எரிந்த நிலையில் தாயும், மகளும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி நாதன் குடியிருப்புப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 10

## வெறும் வாய்ச்சொல் வீரரே கோட்டா!

### சபையில் பொன்சேகா பதிலடி



நாட்டில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என ஜனாதிபதி கூறினாலும் அது வெறும் வாய்ச்சொல்லே தவிர செயலில் வெளிப்படுத்தப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா சபையில் குற்றஞ்சாட்டினார்.

11 பேர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் கிடைக்காத நியாயம் இதனை வெளிப்படுத்துவதாகவும் 10

## கூட்டணி அமைப்பதிலிருந்து நாம் பின்வாங்கவேமாட்டோம்

### சு.க. செயலர் தயாசிறி திட்டவட்டம்

பலமானதொரு அரசியல் கூட்டணியை அமைக்கும் முயற்சியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கைவிடலில்லை என்று அக்கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் பலமான கூட்டணி நிச்சயம் அமையும். நாம் அவசரப்படவில்லை. 10

## டொலர் கிடைக்காவிடின் 4 மணிநேரம் மின்வெட்டு

### எரிசக்தி அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு



மார்ச் மாத இடைப்பகுதிக்குள் டொலர் கடன் கிடைக்காவிடின், நாளாந்தம் நான்கு மணித்தியால மின்வெட்டை அமுல்படுத்த நேரிடும் என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இதற்குத் 10

## இஸ்லாம் மதப் பாடநூல்களை மீளப் பெறுமாறு அறிவுறுத்தல்

பாடசாலைமாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இஸ்லாம் பாடநூல்களை மீளப் பெறுமாறு கல்விவெளியீட்டுதிணைக்களம் அறிவித்துள்ளது.

மாகாணக் கல்வி பணிப்பாளர்கள், வலயக் கல்வி பணிப்பாளர்கள் ஊடாக இதற்கான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனக் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் அயிலப்பெரும தெரிவித்தார்.

'ஒரு நாடு – ஒரு சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணியிடமிருந்து கிடைத்த பரிந்துரைகளுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான இஸ்லாம் பாடப்புத்தகங்களை பரிசீலித்து 10

## பொலிஸ் பேச்சாளராக மீண்டும் ரோஹண?



சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, பொலிஸ் ஊடகப் பேச்சாளராக மீண்டும் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது. 10

## தென்கொரிய சபாநாயகர் நாடாளுமன்றம் வருகை

### எதிர்க்கட்சித் தலைவரின் பணியை முன்னெடுத்தார் ரணில் விக்கிரமசிங்க



தென்கொரிய சபாநாயகர் இன்று இலங்கை நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தார்.

நாடாளுமன்றம் வரும் கௌரவ விருந்தினரை ஆளும் கட்சி சார்பில் அவைத்தலைவர் தினேஷ் குணவர்தன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் 10

## கமநல திணைக்களத்துக்கு கோட்டா நேற்று திடீர் கண்காணிப்பு விஜயம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்குத் திடீர் கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டார்.

நாட்டின் அரச தலைவர் ஒருவர், கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்குக் கண்காணிப்புப் பயணம் மேற்கொண்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுமார் மூன்று மணிநேரம் இந்தக் கண்காணிப்புப் பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி, அனைத்துப் பிரிவுகளையும் கண்காணித்தமையுடன், 10



காலைக்கதிர் Kalaikkathir

# விவசாயத்தால் நாம் நடுத்தெருவில் கிளிநொச்சி விவசாயிகள் கவலை

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம், ஜன.21

ஜனாதிபதியின் பசுமை விவசாயத்தால் நாம் நடுத் தெருவில் நிற்கிறோம். இந்த நிலைமையில் அரசாங்கம் அரிசியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது என கிளிநொச்சி விவசாயிகள் ஆதங்கம் தெரிவிக்கின் றனர்.

இரணைமடுக்குளக் கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சியில் ஊடக சந்திப்பை மேற்கொண்டனர். இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன மண்டபத்தில் ஊடக சந்திப்பு நடைபெற்றது. இதன்போது இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனச் செயலாளர் முத்து சிவ மோகன், தலைவர் ர.ரவீந்திரகுமார் மற்றும் சிதம்ப ரப்பிள்ளை இராஜேந்திரம் ஆகியோர் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் -

இந்தப் பசுமை விவசாயத்தால் மூன்றில் ஒரு பங்கு அறுவடை மட்டுமே கிடைக்கிறது. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மெற்றிக் தொன் அறுவடை கிடைக்கும் கிளி நொச்சி மாவட்டத்தில் இன்று 30 ஆயிரம் தொன் அறு வடை கூடக் கிடைக்கவில்லை.

நஷ்ட ஈடு தருவதாகச் சொல்லுகின்றனர். நெல்லை 75 ரூபா நிர்ணய விலைக்குக் கொள்வனவு செய்வதாகக் கூறப்பட்டாலும் ஒரு விவசாயியிடம் கூட இதுவரை நெல் லைக் கொள்வனவு செய்யவில்லை.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் அரிசி உள்ளிட்ட பொருள்கள் நச்சுத் தன்மையற்றவை என்று இந்த அரசால் சொல்ல முடியுமா?

தங்க நகைகளை அடைவு வைத்தும், கடன் பட்டும் விவசாயிகள் மேற்கொண்ட அறுவடை மூலம் அவற்றை மீட்க முடியாத நிலைமையே உள்ளது.

சேதனப் பசளை என்றால் அதற்குரிய நெல்லை அறி முகம் செய்யவேண்டும். இந்தியாவில் எவ்வாறு விவ சாயிகள் தற்கொலைக்கு ஆளாகினார்களோ அந்த நிலை மைக்கு எம்மையும் போக விடாது அரசு உடனடியாக நஷ்ட ஈட்டை வழங்க வேண்டும். - என்றனர்.







# புனரமைக்கப்பட்ட சிறிமதிபாய ஜனாதிபதி, பிரதமரால் திறப்பு

கொழும்பு, மலர் வீதியில் அமைந்துள்ள 'சிறிமதீபாய' பிரதமர் அலுவலகம் புனரமைக்கப்பட்ட நிலையில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

நினைவுக் கல்வெட்டை திரைநீக்கம் செய்த ஜனாதிபதி, அலுவலக வளாகத்தில் உள்ள புத்தர் சிலைக்கு மலர் பூஜை செய்த பின்னர் அடையாள ரீதியாகக் கடமைகளை ஆரம்பித்து வைத்தார்.

புனரமைக்கப்பட்ட அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்களை பார்வையிட்ட ஜனாதிபதி, அலுவலக வளாகத்தையும் பார்வையிட்டார். அலுவலகத்தின் கடமைகளை ஆரம்பிப்பதை முன்னிட்டு தபால் அட்டையும் நினைவு முத்திரையும் ஜனாதிபதியின் தலைமையில் வெளியிடப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் பிரதமரின் முன்னாள் செயலாளர் காமினி செனரத்தின் மேற்பார்வையின் கீழ், இலங்கை கடற்படையினர் இந்த மாளிகையைப் புனரமைத்துள்ளனர்.

இந்த இரண்டு மாடி மாளிகையை ஆல்பர்ட் இம்மானுவேல் டி சில்வா தனது மகன் சர் ஆல்பர்ட் ஏர்னஸ்ட் டி சில்வாவுக்காக, 1916 இல் நிர்மாணித்தார். இது, 1960 ஆம் ஆண்டு அவரின் மறைவுக்குப் பின்னர் குடும்ப உறுப்பினர்களால் அரசாங்கத்துக்குக் கையளிக்கப்பட்டது.

கல்வி மற்றும் வானொலி அமைச்சு, உள்ளூராட்சி மன்றம் மற்றும் வீடமைப்பு அமைச்சு ஆகியன, அந்தக் காலத்தில் சிறிமதீபாயவில் இயங்கி வந்ததோடு, 1978 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாஸவால் சிறிமதீபாயவில் பிரதமர் அலுவலகம் நிறுவப்பட்டது.

நூறு வருடங்களுக்கு மேல் பழைமையான 'சிறிமதீபாய', 44 வருடங்களின் பின்னர் அதன் பழைய தோற்றத்துக்கே முழுமையாகப் புனரமைக்கப்பட்டது.

'சிறிமதீபாய' வரலாறு பற்றிய தகவல்கள் மற்றும் புகைப்படங்கள் அடங்கிய நூல், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரததால் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

புனரமைக்கப்பட்ட பிரதமர் அலுவலகத்தின் திறப்பு விழாவைக் குறிக்கும் வகையில், முன்னாள் பிரதமர்களின் செயலாளர்களுடன் ஜனாதிபதி புகைப்படத்துக்கு தோற்றினார். பின்னர் அவர் நினைவுப் பதிவேட்டில்



ஒரு குறிப்பையும் பதிவிட்டார்.

அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, முன்னாள் பிரதமர்களின் செயலாளர்கள், அரச அதிகாரிகள் மற்றும் அல்பேர்ட் ஏர்னஸ்ட் டி சில்வாவின் உறவினர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சியில் ஓட்டோ விபத்து; காயமடைந்தவருக்குக் கொவிட்!

ஓட்டோ விபத்தில் படுகாயமடைந்த சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள சம்பவம் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்து நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

வட்டக்கச்சி சென்று திரும்புகையில் பஸ் ஒன்றுக்கு இடம் கொடுக்க முற்பட்ட போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து கிளிநொச்சி குளத்தின் துருசு பகுதியில் உள்ள பாலத்தில் விழுந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயம் அடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது அவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி உதயநகர் மேற்கு பகுதியை சேர்ந்த தியாகராசா சிவநாதன் என்ற 54 வயதுடையவரே சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.



இதேவேளை, இவருடன் பயணித்த மற்றொருவரைக் காணவில்லை என சாரதியின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் தீ விபத்து ஏற்பட்டு பொருள்கள் அழிவு





கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு 11.45 மணியளவில் ஏற்பட்ட பாரிய தீ விபத்து பிரதேச சபையின் தீயணைப்பு பிரிவினர் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒரு பகுதியில் பாரிய தீ விபத்து ஒன்று ஏற்பட்டு குறித்த தீ விபத்து கரைச்சி பிரதேச சபையில் தீயணைப்பு பிரிவினர் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தொடர்ந்து இராணுவ தீயணைப்பு பிரிவினரும் களத்தில் இறங்கி மேலும் தீ பரவாத வகையில் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

குறித்த தீ விபத்து சம்பவத்தில் கிளிநொச்சி வைத்தியசாலை பணிப்பாளர், இராணுவ உயர் அதிகாரிகளின் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்டவர்கள் கண்காணிப்பில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் ஆராயப்பட்டு வரும் நிலையில் குறித்த விபத்தால் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.







காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## சம்பந்தன் உரைத்த நியாயம்

**இந்த இலங்கைத் தீவில் தமிழர்கள் தமது தாயகத்தில் தனித்துவ இறைமையுடைய இனமாக வாழ்ந்தார்கள். அந்தத் தமிழர் தேசத்தை சிங்கள தேசத்துடன் இணைத்தவர்கள் பிரிட்டிஷ் கொலனித்துவ ஆட்சியாளர்கள்தான். ஆகவே அந்த இணைப்பால் ஏற்பட்ட தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு, நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய, நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருவது பிரிட்டனின் கடமையும் பொறுப்புமாகும்.**

**இப்படி இலங்கை வந்திருக்கும் பிரிட்டனின் தெற்காசிய மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான அமைச்சர் தாரிக் அஹமட்டிடம் நேரடியாகக் கூறியிருக்கின்றார் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.**

**பிரிட்டனிடம் தமிழர் சார்பில் கூற வேண்டிய செய்தியை, உரிய பிரமுகர், உரிய தலைவரிடம் தெரிவித்திருக்கின்றார் என்றே கருதுகிறோம்.**

**சுயாதீனமாக, சுதந்திரமாக இயங்கிய தமிழர் தேசத்தின் இறைமை தமிழர் தாயகத்தை அந்நியர்கள் கைப்பற்றியபோது அது கைம்மாறியது. அதை இறுதியில் பெற்றுக் கொண்ட ஆங்கிலேயர் தாம் இலங்கைத் தீவுக்கு சுதந்திரத்தை வழங்க முன்னர், இந்தத் தீவிலிருந்த இரண்டு தேசங்களினதும் – தமிழ்த் தேசத்தினதும் சிங்களவர் தேசத்தினதும் – இறைமைகளை ஒன்று கலந்து அரசாட்சியைத் தொடர்ந்து மேற்கொண்டு விட்டு, இலங்கைத் தீவை விட்டு வெளியேறும்போது முழு இறைமையையும் ஒன்று சேர்த்து, அட்சர கணித எண்ணிக்கையில் மிகப் பெரும்பான்மையினரான சிங்களவர்களின் கையில் கொடுத்து விட்டு வெளியேறினர்.**

**பெரும்பான்மையினரின் தீர்மானமே முடிவு என்ற ஜனநாயகச் சீரழிவுக் கோட்பாட்டின் கீழ், தமிழ்த் தேசத்தின் இறைமை மீதான தனது ஆதிக்கத்தை விடாமல் கைப்பற்றி, தமிழர் தேசத்தை, அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி, தனது ஆட்சியைத் தொடருகின்றது.**

**இதுதான் தமிழர் தேசத்தின் அடிமை வரலாற்றின் சுருக்கம். தமிழர்களின் இந்த இழிநிலைமைக்கு வெள்ளைக்காரர்கள் காரணமான கதை இதுதான்.**

**1619 இல் இறுதிப் போர் நடத்தி, தமிழ் இராச்சியத்தைத் தோற்கடித்து, தமிழ் மன்னன் சங்கிலி குமாரனை தூக்கிலிட்டார்கள் போர்த்துக்கேயர்கள்.**

**ஆயினும், அவர்களும் சரி அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்தரும் சரி, தமிழர் தேசத்தை தனி இராச்சியமாகவே தமது ஆளுகைக்குள் வைத்திருந்தனர். அதன் மூலம் தமிழர் தாயகத்தின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பேணி, தமிழர்களின் தனித்துவ இன அடையாளத்தை அங்கீகரித்து நடந்து கொண்டார்கள்.**

**ஆனால், 1799 இல் இலங்கைத் தீவின் ஆட்சிக் கட்டுப்பாட்டை ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றிக் கொண்ட பிரித்தானிய குடியேற்ற சாம்ராஜ்ஜியம், இந்தத் தீவின் இரண்டு பெரும்பான்மை இனங்களுக்கும் இடையில் இருந்த தனித்துவ அடையாளங்கள், வேறுபாடுகளைக் கவனத்தில் எடுக்காமல், தன்னுடைய ஆட்சி மற்றும் நிர்வாக நலனுக்காக 1833 இல் இரண்டு தேசங்களையும் ஒன்றாக்கியது. ஒற்றையாட்சி முறையைத் திணித்தது.**

**இவ்வாறு ஆங்கிலேய குடியேற்ற சாம்ராச்சியம் இந்தத் தீவில் தேசிய இனப்பிரச்சினைக்கு அடித்தளமிட்டது.**

**இந்த இலங்கைத் தீவில் இனப்போர் மோசமாக வெடித்து, வன்முறைப் பிரளயம் கட்டவிழ்ந்து, இரத்த ஆறு ஓடி, பல லட்சம் பேர் கொல்லப்படுவதற்குக் காரணமான முதல் தரப்பு என்ற பொறுப்பு பிரிட்டிஷ் கொலனித்துவ ஆட்சியாளர்களையே சாரும்.**

**அதனால் நீங்கள் தோற்றுவித்த இந்த மோசமான இனப் பிரச்சினையயை நீதி, நியாயமான – நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய – தீர்வை எட்டச் செய்யும் பொறுப்பு உங்களையே சாரும் என்று பிரிட்டனின் வெளிவிவகாரத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு தமிழத் தேசிய இனத்தின் தலைவராக எடுத்துக் கூறியிருக்கின்றார் சம்பந்தன்.**

# தனது இறுக்கமான நடைமுறையிலிருந்து தமிழ்க் கூட்டமைப்பு விடுபடல் வேண்டும்!

## ஜோன் செனவிரத்ன கோரிக்கை



தேசிய பிரச்சினை தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் இப்போது ஏற்பட்டுள்ளது. நாடாக ஒன்றிணைந்து செயற்படுவதில் தமது கொள்கையை விட்டுக்கொடுத்து அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டோம் என்ற இறுக்கமான நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்குமானால் ஒருபோதும் தீர்வுகளை நோக்கிப் பயணிக்க முடியாது என அரசாங்கம் தெரிவிக்கின்றது.

நாடாளுமன்றத்தில், ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையின் இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன கூறுகையில் –

இன்று நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கத் தன்னால் மட்டுமே முடியும் என ஜனாதிபதி எங்கேயும் கூறவில்லை, இதில் சகலரதும் ஒத்துழைப்பையும் அவர் எதிர்பார்க்கின்றார்.

இதுவே தலைவர் ஒருவரின் நிலைப்பாடாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைய நெருக்கடிக்கும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒத்துழைப்புகளை வழங்காமல் மாறாக விமர்சனக் கருத்துக்களையே முன்வைத்து வருகின்றனர்.

இன்றைய நெருக்கடி நிலைக்கு கொவிட் வைரஸ் பரவலே காரணமாகும். இதனால் பல துறைகள் வீழ்ச்சி கண்டன, சகல பக்கமும் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் தடைப்பட்டது.

யுத்தத்துக்குப் பின்னர் வடக்கு கிழக்கு மக்களுக்கு உரிய அபிவிருத்தி தேவைப்படுவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

யுத்தத்துக்குப் பின்னர் மாகாணசபையை உருவாக்கிய தமிழ்த் தலைவர்கள் அதன் மூலமாக மக்களுக்கு எதனையும் பெற்றுக் கொடுக்க முன்வரவில்லை. மத்திய அரசாங்கம் ஒதுக்கும் நிதியைப் பயன்படுத்தவில்லை. அதில் மக்களுக்கு சேவை செய்யவில்லை.

தமிழர் தரப்பு தமது நிலைப்பாடுகளில் இருந்து விடுபட்டு அபிவிருத்தி மற்றும் ஏனைய சகல வேலைத் திட்டங்களிலும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். – என்றார்.

# மாணவர்கள் கொவிட்டுக்குள்ளாகும் வீதம் நாட்டில் அதிகரிக்கப்பட்டுள்ளது

## உபுல் றோஹண கருத்து

நாடளாவிய ரீதியில் பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகும் வீதம் அதிகரிகரித்துள்ளது.

இதே நிலைமை தொடருமானால் பாடசாலைக் கட்டமைப்பு முழுமையாக சரிவடையும். எனவே, பாடசாலைக்கு அழைக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட வேண்டும். இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்க தலைவர் உபுல் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த சில தினங்களாகப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கொவிட் தொற்று பரவும் வீதம் அதிகரித்து வருகிறது. நாட்டிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் வகுப்பறை கள் இடவசதி மட்டுப்படுத்தப்பட்டனவாகவே காணப்படுகின்றன. பெரும்பாலான வகுப்பறைகளில் ஒரே இடத்தில் 40 மாணவர்கள் வரை காணப்படுகின்றனர்.

நுவரெலியா போன்ற மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் காற்றூட்ட வசதி மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. அவ்வாறான வகுப்பறைகளில் ஒரு மாணவனுக்குத் தொற்றுறுதி செய்யப்பட்டாலும், ஏனையவர்களும் துரிதமாகத் தொற்றுக்கு உள்ளாகக் கூடும். குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் பாடசாலைகளில் கொவிட் தொற்று பரவல் பாரியளவில் அதிகரித்துள்ளது.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு வகுப்பறைகளுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டும். அனைத்து மாணவர்களும் பாடசாலைக்கு அழைக்கப்பட்டுள்ளமையால் தொற்றாளர் எண்ணிக்கையும் பாரியளவில் அதிகரித்துள்ளது.

இவ்வாறான நிலைமை பாடசாலைக் கட்டமைப்பு முழுமையாக சரிவடைவதற்கும், பெற்றோர் மன அழுத்தங்களுக்கு உள்ளாவதற்கும் வழிவகுக்கும்.

இவ்வாறு பெற்றோர் மாத்திரமின்றி மாணவர்களும் மன உளைச்சலுக்கு உள்ளாகுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

இதேபோன்று தொடர்ந்தும் பாடசாலை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியுமா என்பது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக் கொள்கின்றோம். – என்றார்.

# வெறும் வாய்ச்சொல் வீரர் ஜனாதிபதி கோட்டாபய!

## பொன்சேகா சாடல்



நாட்டில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என ஜனாதிபதி கூறினாலும் அவை வெறும் வாய்ச் சொல்லே தவிர செயலில் வெளிப்படுத்தவில்லை என சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

11 பேர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் கிடைக்காத நியாயம், நீதி இதனை வெளிப்படுத்துவதாகவும் கூறினார்.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணை இடம்பெறும் போதே அதில் சம்பந்தப்பட்டவருக்குப் பதவி உயர்வு வழங்கப்படுகின்றது என்றும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார்.

அதேபோல், புதிய அரசமைப்பு தொடர்பாகப் பேசும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கமே, 20 ஆவது திருத்தம் மூலம் சர்வாதிகார ஆட்சியை உருவாகியுள்ளது என அவர் தெரிவித்தார்.

அரசமைப்பை மாற்றி ஆட்சியாளர்களை உறுதிப்படுத்துவது அவசியமில்லை. மாறாக அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றும் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டார்.

எனவே, இந்த மாற்றத்தை மக்களே மாற்றியமைக்க வேண்டும் என்றும் புதிய அரசியல் பயணமொன்றை உருவாக்கினாலேயே இளம் சமூகத்துக்கு நன்மை கிடைக்கும் என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

# பாலின் கொள்வனவு விலையும் அதிகரிப்பு

பால் பண்ணையாடளர்களிடம் இருந்து பாலைக் கொள்வனவு செய்வதற்கான விலையை அதிகரிக்க மில்கோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் ஒரு லீற்றர் பாலின் கொள்வனவு விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பு பெப்ரவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என மில்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ராஜிதவிற்கு எதிரான வழக்கு விசாரணைகள் மார்ச் 15 இல்!



கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சர்ச்சைக்குரிய வெள்ளை வான்தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்கு இடையூறு ஏற்படுத்தினார் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராக தாக்கல்செய்யப்பட்ட வழக்கை மார்ச் 15 ஆம் திபதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தோட்டவத்த முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.


யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், Facial, அழுகுக்கலை, உணவுகள் தயாரித்தல் பயிற்சிகளின் 2021ம் ஆண்டு மாணவிகளின் பரீட்சைகளுக்காக இடைநிறுத்தப்பட் டிருந்த கிழமை நாள் மற்றும் சனி ஞாயிறு புதிய பிரிவுகளுக்கு வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பமாகின்றன.

பதிவுகளை மேற்கொண்டிருந்தவர்களும், புதிதாக கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், Facial, அழுகுக் கலை, உணவுகள் தயாரித்தல் ஆகிய பயிற்சிகளில் சேர விரும்புவர்களும் தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை நேரில் வந்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். -இயக்குநர்


# முள்ளியவளை கிணற்றிலிருந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்டன!

## சந்தேகத்தில் மூவர் கைது



கடந்த 30.12.2020 அன்று முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவல்காட்டு கிராமத்தில் பாழடைந்த கிணற்றில் இருந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

குறித்த பகுதியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.அன்வர்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வந்தனர்.

அதன்படி, குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக இனம் காணப்பட்ட சந்தேக நபர்கள் மூவரை முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இவர்களைக் கைது செய்துள்ளதாக முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். உயிரிழந்த நிலையில் மனித எச்சங்களாக மீட்கப்பட்டவரின் மனைவி, உயிரிழந்தவரின் நண்பர்கள் இருவர் உள்ளிட்ட மூன்று பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொன்னகர் பகுதியைச் சேர்ந்த இருவரும் கேப்பாபிலவைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமையோடு, இவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் முள்ளியவளை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் தீ விபத்தை நேரில் சென்று ஆராய்ந்தார் டக்ளஸ்!



கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் தீ விபத்து ஏற்பட்ட பகுதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர், சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன் சம்பவம் தொடர்பில் கேட்டறிந்தார்.

தொடர்ந்து கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சரவணபவன், வைத்தியசாலை பணிப்பாளர் சுகந்தன் மற்றும் வைத்தியர்களுடன் விசேட கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இதேவேளை குறித்த தீ விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமையுடன் தடயவியல் பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் இதுவரை முழுமையாக வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




Since 2014

# அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**22044 | வே | 1980**
கோண்டாவில் | CCNA
Administrator | Divorced
மிருகசிரிசம் (மிதுனம்)
164 செ.மீ | இந்து

**22342 | வே | 1980**
மட்டுவில் | G.C.E. A/L
Business | பிரான்ஸ்
திருவோணம் (மகரம்)
178 செ.மீ | இந்து

**22011 | வே | 1981**
சுன்னாக நகரம் | HNDA
Development Officer
பூரம் (சிம்மம்)
173 செ.மீ | இந்து

**22531 | வே | 1982**
சண்டிலிப்பாய் | Admin
Director | Divorced
உத்திரட்டாதி (மீனம்)
179 செ.மீ | இந்து

**22065 | வே | 1984**
கரவெட்டி | Diploma
Investigation Officer
பூசம் (கடகம்)
176 செ.மீ | இந்து

**22312 | வே | 1985**
யாழ்நகரம் | MSC, BSC
Software Eng| America
சதயம் (கும்பம்) | இந்து
174 செ.மீ | செவ் : 12

**22333 | ப | 1985**
வல்வெட்டித்துறை | G.C.E. A/L
Chef | சுவிட்சர்லாந்து
பரணி (மேடம்) | கிறிஸ்தவம்
170 செ.மீ | செவ் : 02

**22017 | சி | 1986**
கொழும்புத்துறை | இந்து
MBBS | Doctor
அஸ்வினி (மேடம்)
168 செ.மீ | செவ் : 02

**22020 | வே | 1988**
காரைநகர் | இந்து
BSC | IT Executive
உத்திரட்டாதி (மீனம்)
177 செ.மீ | செவ் : 12

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | BSC Eng (Hons)
Engineer | சிங்கப்பூர்
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | இந்து

**22071 | வி| 1988**
மாத்தளை | G.C.E. A/L
Business | இந்து
உத்தராடம் (மகரம்)
161.5 செ.மீ | செவ் : 07

**22336 | வே | 1988**
ஊரெழு | NIIT | Divorced
Technical Team Leader
ஆய்யிலியம் (கடகம்) | இந்து
181 செ.மீ | செவ் : 08

**22230 | வே | 1988**
கொக்குவில் | Diploma
Receptionist | பிரான்ஸ்
சுவாதி (துலாம்) | இந்து
171 செ.மீ | செவ் : 02

**22525 | வே | 1989**
சண்டிலிப்பாய் | இந்து
Deputy General Manager
சதயம் (கும்பம்)
181 செ.மீ | BS in Int.

**21999 | வ | 1989**
திருகோணமலை | BSC, MSC
Technologist (MLT)
ரேவதி (மீனம்) | இந்து
164 செ.மீ | செவ் : 12

**22002 | வே | 1989**
கோண்டாவில் | இந்து
BSC | Teacher
கேட்டை (விருச்சிகம்)
183 செ.மீ

**22504 | சோ.வே | 1989**
நுவரெலியா | Diploma
Restaurant Manager | மாலட்ா
சதயம் (கும்பம்) | இந்து
173 செ.மீ | செவ் : 07

**22050 | வே | 1989**
வண்ணார்பண்ணை | இந்து
G.C.E. A/L | Transport & Travels
திருவாதிரை (மிதுனம்)
176 செ.மீ | சூ செவ் : 02

**22477 | வே | 1989**
புதுக்குடியிருப்பு | Diploma
Staff | அவுஸ்திரேலியா
கேட்டை (விருச்சிகம்) | RC
168 செ.மீ | சூ செவ் : 09

**22047 | வே | 1989**
தெல்லிப்பளை | இந்து
G.C.E. A/L | Business | UK
மூலம் (தனுசு)
179 செ.மீ | சூ செவ் : 09

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22360 | வே | 1982**
கோண்டாவில் | Divorced
Diploma| Teacher
அத்தம் (கன்னி) | இந்து
179 செ.மீ | செவ் : 01

**22516 | வே | 1983**
நெல்லியடி | MBBS
Doctor | அயர்லாந்து
சித்திரை (கன்னி)
172 செ.மீ | இந்து

**22059 | ப | 1987**
கொட்டகலை | இந்து
Diploma | Science Teacher
சுவாதி (துலாம்)
158 செ.மீ

**22264 | கோ | 1987**
கரவெட்டி| இந்து
MSC, BSC | Civil Engineer
பூரட்டாதி (கும்பம்) | இந்து
160 செ.மீ

**22258 | கு | 1987**
புதுக்குடியிருப்பு | இந்து
MBBS | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**21966 | கு | 1988**
காங்கேசந்துறை | இந்து
MBBS | Doctor
சுவாதி (துலாம்)
152 செ.மீ | செவ் : 02

**21927 | வி | 1989**
கொழும்பு | Divorced
G.C.E. A/L | Gold Smith
திருவாதிரை (மிதுனம்)
155 செ.மீ | இந்து

**22041 | வே | 1989**
யாழ் நகரம் | Non RC
Diploma | Ayurvedic Doctor
திருவோணம் (மகரம்)
163 செ.மீ | சூ. செவ் : 06

**21711 | வே | 1990**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
சதயம் (கும்பம்)
164 செ.மீ

**22378 | வே | 1991**
கொடிக்காமம் | இந்து
BSC (Hons) IT | Teacher
ரோகிணி (ரிஷபம்)
155 செ.மீ | செவ் : 07

**22200 | ப | 1991**
சுன்னாகம் | இந்து
BA | Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | செவ் : 01

**22249 | கு | 1991**
சித்தங்கேணி | இந்து
BSC | Graduate Trainee
அஸ்வினி (மேடம்)
154 செ.மீ | செவ் : 12

**22246 | வே | 1991**
மானிப்பாய் | BSC, MSC
Software Tester | ஜேர்மனி
திருவாதிரை (மிதுனம்) | இந்து
160 செ.மீ | செவ் : 04

**22098 | ந | 1991**
உடுப்பிட்டி | இந்து
G.C.E. A/L | Searching Job
உத்தரம் (கன்னி)
142 செ.மீ | செவ் : 12

**22167 | சா | 1991**
பண்டத்தரிப்பு | இந்து
BA | Development Officer
பூரம் (சிம்மம்)
168 செ.மீ | சூ. செவ் : 09

## கெட்டி மேளம்

மணமக்கள் அறிமுகத்துடன் சிறப்பு பட்டிமன்றமும்

சனிக்கிழமை காலை 10.30 க்கு மற்றும்
ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 க்கும்
CAPITAL தொலைகாட்சியில்

**அருந்ததி பிரைவட் லிமிடட்**

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

**‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** சென்ற வாரம் கிளிநொச்சியில் நீங்கள் நடத்திய கம்பன் கலைக் கல்லூரி அடிக்கல்நாட்டு விழா நிகழ்ச்சியில் வேறுவேறு கட்சிகளைச் சார்ந்த (பகையுள்ள) நம் தமிழ்த் தலைவர்களை ஒன்றாகச் சேர்த்து சாதனை படைத்து விட்டீர்கள். இதனையே ஒரு முன்னுதாரணமாய்க் கொண்டு இவர்கள் அனைவரையும் நீங்கள் ஒன்று சேர்க்க ஏதேனும் வழி செய்தால் என்ன?

**பதில் :-** உண்மையில் அது சாதனைதான்! தமக்குள் முரண்பாடுகள் இருந்தாலும் எங்கள் அழைப்பை ஏற்று, அவர்கள் அனைவரும் ஒன்றாக வந்ததால், நாம் பெருமையுற்றோம். அத் தலைவர்களின் பெருந்தன்மையை கம்பன் கழகம் நன்றியோடு போற்றி நிற்கிறது.

அரசியல் முரண்பாடுகளை தனி மனிதப் பகையாக்கக்கூடாது என்பது எனது கருத்து. தமிழ்நாட்டில் எம்.ஜி. ஆர்., கருணாநிதி, ஜெயலலிதா போன்றோரின் காலங்களில்தான் இத்தகைய ஓர் கூடா ஒழுக்கம் போற்றப்பட்டது. ஒருவரின் முகத்தில் ஒருவர் விழிக்கக்கூட மறுத்த, அசிங்கமான அரசியல் (அ) நாகரிகத்தை அவர்கள்தான் வளர்த்தார்கள்.

மேற்கு நாடுகளிலெல்லாம் அரசியல் முரண்பாடுகளை தனி மனித முரண்பாடுகளாய் ஆக்குவதில்லை. அந்த நாகரிகத்தை நம் தலைவர்களும் கற்றுக் கொள்ளவேண்டும். நம் தலைவர்கள் எங்கள் நிகழ்வில் தமிழுக்காக ஒன்றிணைந்து, உயர்ந்த அரசியல் நாகரிகப் பாதைக்கான அத்திவாரம் இட்டார்கள். இது தொடர வேண்டும் என்பதுதான் எங்களது விருப்பமும். அதற்கு அவர்கள் கீழ்க்கண்ட விடயங்களை மனங்கொண்டு நடந்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியிலும் கொள்கை முரண்பாடுகளைக் கண்டித்துக் கொள்ளலாம். தனி மனிதர்களை இழிவு செய்து பேசுதல் கூடாது.

பொது இடங்களில் ஒருவரையொருவர் காணும்போது முகந்திருப்பிக்கொள்ளும் வழக்கத்தை நிறுத்தவேண்டும்.

இனத்திற்காக தம்மை அர்ப்பணித்த போராளிகளின் தியாகத்தை வைத்து, ஒருவர் மற்றவரை இழிவு செய்வதையோ, அதற்குப் பதிலாக மற்றவர் போராளிகளை இழிவு செய்வதையோ உடன் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

பொது எதிரியின்முன் நாம் பகை மறந்து நடக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து நடத்தல் அவசியம்.

நீண்ட நாள்களுக்குப் பின் ஜனநாயகப் பாதையை தொடங்கியிருக்கிற நம் புதிய தமிழ்த் தலைவர்கள் அந்த ஜன நாயகப் பாதையை சீர்செய்து, வரப்போகிற புதிய தலைமுறைத் தலைவர்களின் மனதில் அரசியல் கண்ணியத்தைப் பதிவு செய்ய வேண்டும்.

இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் ஒன்று சோர்ந்து நம் இனத்தைப் பலப்படுத்த வேண்டிய தேவை இருப்பதை உணர்ந்து, அதற் கான நட்புப் பாதையை முற்றாக அடைத்து விடாமல் நடந்து கொள்ளப் பழக வேண்டும்.

முக்கியமான ஒரு விடயம். இன்றைக்கு அணி அணியாய் ஒன்று சேர்ந்திருக்கிற தலைவர்கள், சில காலங்களின் முன் ஒருவரையொருவர் கடுமையாய்ப் பகைத்து நின்றவர்கள்தான் என்ற உண்மையை நினைந்தால் மேற்சொன்ன காரியங்களை இலகுவாகச் செய்யலாம்.

- இவையெல்லாம் நம் இனத்தின் வருங்கால நன்மை கருதி என் மனதில் உதித்த எண்ணங்கள். நம் தலைவர்களின் மனதிலும் இக்கருத்துக்கள் பதியுமானால் நம் இனம் உயரும்.

நிறைவாக ஒன்று, எங்கள் நிகழ்வுக்கான இத்தலைவர்களின் ஒருமித்த வருகை என்பது, அவர்கள் எங்களுக்குத் தந்த மரியாதை அன்று. அது தமிழுக்கும் கம்பனுக்கும் தந்த மரியாதை! முன்னுதாரணம் காட்டி நடந்து கொண்ட அத்தலைவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகின்றேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஆலோசனை நன்றாய்த்தான் இருக்கிறது. நவக்கிரகங்கள் ஒன்று சேருமா என்பதுதான் கேள்வி.**



**2. கேள்வி:-** வெகு சீக்கிரத்தில் ‘பவர்’ கட்நிகழப் போகிறதாமே?

**பதில் :-** யாருடைய ‘பவரை’ச் சொல்கிறீர்கள்?

**உலகநாதரின் ஒப்பீனியன் * கேள்வி கேட்டால் பதில் சொல்லாமல், திரும்பக் கேள்விக் கேட்பது நியாயமா? யாருடைய ‘பவர்’ கட்டாகப் போகிறதென்பது இவருக்குத் தெரியாதாக்கும்?**

**3. கேள்வி:-** சீன அரசாங்கத்தைப் போலவே, இந்திய அரசாங்கமும் நம் நாட்டுக்கு கடன்களை அள்ளி வழங்கத் தொடங்கியிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** அந்த அரசாங்கங்கள் தரு பவை எல்லாம் வெறுமனே கடன்கள் அல்ல. அவை தூண்டில் முள்ளில் கொழுவப்படும் புழுக்கள்! வெகு சீக்கிரத்தில் அப்புழுக்களை விழுங்கிய நம் இலங்கை அரசாங்கம் மூச்சு விட முடியாமல் துடிக்கப்போகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அரசாங்கம் மட்டுமா? மக்களும்தான் துடிக்கப் போகிறார்கள். முடிந்தவரை எல்லோரும் மூச்சை நன்றாக இழுத்து வைத்துக் கொள்ள வேண்டியதுதான். ஆலோசனை எப்பூடி?**

**4. கேள்வி:-** அரசாங்கம் இக்கட்டின் உச்சத்தில் இருக்கும் இவ்வேளையில் சலுகைகள் நோக்கி அறிவிக்கப்படும் போராட்டங்கள் நியாயமானவையா?

**பதில் :-** இல்லைதான்! அரசாங்கம் சரியாக இருக்கும் வேளையில் இந்தப் போராட்டங்கள் நடந்திருந்தால் அவற்றை அரசாங்கம் எப்படிக் கையாண்டிருக்கும் என்பதையும் நாம் ஊகிக்க வேண்டும். இளகின இரும்பைக் கண்டால் கொல்லன் ஓங்கி ஓங்கி அடிப்பானாம் என்பது இதனைத்தான். இந்நாட்டில் அரசுக்கும் சரி, மக்களுக்கும் சரி, தேசம் பற்றிய கவலை இல்லை என்பதுமட்டும் தெளிவாய்த் தெரிகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாழும் போது பணிந்தால், தாழும்போது உயரலாம். இது உலகநாதரின் பொன்மொழியாக்கும். ஹிஹிஹி...!**

**5. கேள்வி:-** எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி என்று பாரதி கம்பனின் ஆற்றலைப் புகழ்கிறானே. அதென்னையா குறிகளால் காட்டும் முயற்சி?

**பதில் :-** கப்பெரிய விசயம் ஒன்றினை மிகச் சுலபமாய்க் கேட்டு விட்டீர்கள். இது, ஒரு மணிநேர சொற்பொழிவுக்கான தலைப்பு ஒன்று. முடிந்தவரை சுருக்கமாய் பதில் சொல்ல முயல்கிறேன்.

சில பேர் இப் பாடல் அடியில் வரும் “எல்லையொன்றின்மை எனும் பொருள் என்பதனை பரம்பொருள் என்றுகொண்டு, காண முடியாத கடவுளைக் கம்பன் குறிகளால் காட்ட முயல்கிறான் என்று பொருள் சொல்லி வருகிறார்கள்.

கடவுள் மட்டுமல்ல, உலகின் உயர் விடயங்கள் அனைத்துமே வார்த்தைகளுக்குள் அடங்காதவைகள்தான் என்று நினைக்கிறேன். அன்பு, தாய்மை, காதல், தியாகம், பக்தி என்பனவாய் வார்த்தைகளுக்குள் அடங்காத பல விடயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை எப்படி மற்றவர்களுக்கு உரைப்பது என்பது தான் கேள்வி.

கொழும்பிலிருந்து வீதி வழியாகப் போகிறபோது இடையில் யாழ்ப்பாணம் என்று எழுதி அம்புக்குறியிட்ட அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டிருப்பதை பார்த்திருப்பீர்கள். அப்பலகைதான் யாழ்ப்பாணமா? என்ற கேள்வி எழும். நிச்சயம் அது யாழ்ப்பாணம் அல்ல. அப்பலகை வைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் யாழ்ப்பாணம் செல்லும் வழியைக் காட்டுவதேயாம். அப்பலகை, செல்லவேண்டிய இடத்தைக் காட்ட உதவும் குறி மட்டுமேயாம். அந்த குறியைக் கொண்டு அடையவேண்டிய இடத்தை அடையவேண்டியது நமது கடமை. இதனைத்தான் அருணகிரிநாதர் தனது கந்தரனுபூதி நூலில் ”குறியை குறியாது குறித்து அறியும் நெறி என்றார்.

கம்பனும் வார்த்தைகளுக்குள் அடங்காத பல உயர்ந்த விடயங்களை நாம் தெரிந்து கொள்ள தனது கவிதைகள் மூலம் வழிகாட்டுகிறான். அதனால்த்தான் பாரதி, கம்பனின் முயற்சியை எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி என்று பாடினான் என்பதே என் மனக்கருத்தாய் இருக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * தம்பீ இந்தப் பிளேட்டை அடுத்த டேபிளுக்கு மாத்து. ஹிஹிஹி...!**

**6. கேள்வி:-** ஜனாதிபதியின் நாடாளுமன்ற உரை, உப்புச் சப்பில்லாமல் போய் விட்டதென்று சொல்கின்றார்களே, உண்மையா?

**பதில் :-** பாவம் அவரும்தான் என்ன செய்வார்? கொரோனா தாக்கம், பயிர்களுக்கான உரமின்மை, உணவுப்பொருள்களுக்கான தட்டுப்பாடு, காஸ் வெடிப்பு, தொழிலாளர்கள் சம்பளப் பிரச்சினை, எரிபொருள் தட்டுப்பாடு என பல இன்னல்களுக்கு ஆட்பட்டு தவித்து நிற்கும் மக்களுக்கு, ஆறுதலாய் ஒன்றும் சொல்லாமல், இன்னல்களிலிருந்து நாட்டை மீட்டெடுக்க தலைமைத்துவம் வழங்குவேன் என்று பொதுப்படப் பேசியிருக்கின்றார். எப்படி அத்தலைமைத்துவத்தை வழங்குவேன் என்று சொல்லியிருந்தால் நன்றாய் இருந்திருக்கும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதி யாருக்கு விசயம் விளங்கேல்ல பாருங்கோ... ஜனாதிபதி என்ன வச்சுக் கொண்டா வஞ்சகம் செய்கிறார்.? ஹிஹிஹி....!**

# முல்லையின் தங்க மகளுக்கு இரா.சாணக்கியன் வாழ்த்து!

பாகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் தங்கப்பதக்கத்தை சுவீகரித்த முல்லைத்தீவு யுவதியான கணேஷ் இந்துகாதேவிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு புதியநகர் கிராமத்தில் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் நிலையில் குத்துச் சண்டையில் சாதித்து வரும் கணேஷ் இந்துகாதேவி பாகிஸ்தானில் இடம்பெற்றும் சர்வதேச போட்டியில் பங்குகொள்ள தெரிவாகி பாகிஸ்தான் சென்றிருந்தார்.

கடந்த (செவ்வாய்கிழமை) பாகிஸ்தானின் லாகூரில் இடம்பெற்ற 25 வயதுக்குட்பட்ட 50 – 55 கிலோகிராம் எடைப்பிரிவின் இடம்பெற்ற குத்துச்சண்டை போட்டியில் கணேஷ் இந்துகாதேவி தங்கப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித் தந்துள்ளார். இந்நிலையிலேயே அவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கி யன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கணேஷ் இந்துகாதேவி சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாக இவ்வாறான வெற்றிகளைக் குவித்து வென்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனவும் இரா.சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் –

கணேஷ் இந்துகாதேவி தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பிலேயே வசித்து வருகின்றார். கணேஷ் இந்துகாதேவியின் வெற்றியில் அவரது தாயார் படும் துன்பங்கள் மறைந்து போயுள்ளன.

இப்படியானதொரு தங்க மகளை நாட்டிற்கு தந்த கணேஷ் இந்துகாதேவியின் தாயாருக்கு எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், கணேஷ் இந்துகாதேவி தொடர்ச்சியாக சர்வதேச அரங்கில் வெற்றிகளைக் குவிக்க அனைத்து தரப்பினரும் அவருக்கு பூரண ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். – எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# வியாழேந்திரனின் அழைப்பின் பேரில் கல்வி அமைச்சர் மட்டக்களப்பு விஜயம்!



பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் அழைப்பின் பேரில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன வரும் வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விசேட விஜயமொன்றை மேற்கொண்டார்.

அவரது வருகையின் போது இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் முயற்சியால் கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கதிரவெளி விக்கினேஸ்வரா தேசியப்பாடசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ள தொழில் நுட்ப பீடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிழக்கு பல்கலைக்கழகம், பாடசாலைகள், கல்வியியற் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்றவற்றின் அபிவிருத்திகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கல்வி மற்றும் உயர் கல்வித்துறை சார் அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடலொன்றிலும் கல்வி அமைச்சர் கலந்து கொண்டார்.

# பாட்டலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமை எதற்காக?

## வைத்தியரிடம் அறிக்கை கோரிய நீதிமன்று

ராஜகிரிய விபத்து தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதி ரான வழக்கின் மேலதிக சாட்சி விசாரணையை பெப்ர வரி 18 ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (வெள்ளிக்கிழமை) உத்தர விட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு இராஜகிரிய பிரதேசத்தில் இளைஞர் ஒருவருக்குப் பாரிய வாகன விபத்தை ஏற்படுத்தியமை மற்றும் உரிய சாட்சியங்களை மறைத்தமைஆகிய குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த தினம் சுகவீனம் காரணமாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் இதன்போது நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

இதன்போது, கடந்த 11 ஆம் திகதி வழக்கு விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குற்றம் சாட்டப் பட்டவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார் என வைத்திய அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.


இந்த அறிக்கையை ஆராய்ந்த நீதிமன்றம், அதனை வெளியிட்ட வைத்தியரிடம் வாக்குமூலம் பெறுமாறு குற்றப் பிரிவினருக்கு உத்தரவிட்டதை நினைவுகூர்ந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல், சம்பிக்க ரணவக்கவின் உடல்நிலை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார் என அவர் குறிப்பிட்டார்.

Neithal Batticaloa
"Lake Side Accommodations in the East"



Naaval Hotel
Neithal Batticaloa
74/4, Mugathuwaram Road,
Naavalady, Batticaloa.
(Near Kallay Beach)
077 068 4905

Kurinchi Hill City
"Accommodations with Mountain View"



Kurinchi Hill City
Lemastota, Beragalo,
Badulla.
0777 43 55 57

# மிதிகமவில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் பரிதாபகரமாக சாவு

மிதிகம பிரதேசத்தில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிதிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துர்கி கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

படுகாயமடைந்த 46 வயதுடைய நபர் வலான வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேக நபரை அடையாளம் கண்டுள்ளார் எனவும், அவரைக் கைது செய்ய விசாரணை நடத்திவருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பொரளையில் திடீர் தீ பரவல்!



பொரளை கித்துல்வத்த வீதியிலுள்ள பல வீடுகளில் தீ பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீயை அணைப்பதற்காகக் கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவின் ஆறு தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டு அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன.

எனினும், பல வீடுகளும் பெறுமதியான பொருள்களும் தீயில் எரிந்து சாம்பராகியுள்ளன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Neithal Beach City
Jaffna.
Boating
Kayaking
Archery
Fishing
Rifle Shooting



Accommodation & Food
Activities & Entertainment.
Neithal Beach City
Amman Kovil Road, Navatkuli.
0777 27 68 18
www.neithalbeachcity.com
Fb. Neithal Beach City
Neithal Beach City
Free Entry Ticket

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்துக் காரைநகரில் போராட்டம்





யாழ்ப்பாணம், ஜன. 22

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும் அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரியும் யாழில் போராட்டம் இடம்பெற்றுவருகின்றது.


காரைநகர் பிரதேச கடற்தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கமும் மாவட்ட கடல் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பிரதேச செயலகத்துக்குக் பேரணியாக சென்ற மீனவர்கள் பிரதேச செயலகம் ஊடாக ஜனாதிபதி, மற்றும் கடற்தொழில் அமைச்சர் ஆகியோருக்கு மகஜரையும் கையளித்திருந்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்வதால் தாம் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் எனவும் இவை குறித்து பல போராட்டங்களை முன்னெடுத்துள்ள போதும் இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே வெளிநாட்டு மீனவர்கள் ஒழுங்கப்படுத்தல் தடைச்சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும், உள்ளூர் இழுவைமடி தொழில் சட்டத்தை நடைமுறைப் படுத்தல் வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவில் கஞ்சாச் செடியுடன் ஒருவர் கைது!



மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள நெடுஞ்சேனை பிரதேசத்தில் பண்ணையொன்றில் கஞ்சா செடியை பயிரிட்டு அதனை வெட்டி மறைத்து வைத்திருந்த ஒருவரை 250 கிராம் கஞ்சா செடியுடன் கைது செய்ததுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட புலனாய்வு பிரிவுக்குப் கிடைத்த தகவல் ஒனறையடுத்து அந்தப் பண்ணையை பொலிஸார் முற்றுகையிட்டு அங்கு மறைத்துவைத்திருந்த கஞ்சா செடியுடன் ஒருவரைக் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கொள்கை வட்டி வீதத்தை அதிகரிப்பதற்குத் தீர்மானம்!

கொள்கை வட்டி வீதத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

50 புள்ளிகளால் கொள்கை வட்டி வீதம் அதிகரிக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய, நிலையான வைப்புக்கான வட்டி 5.5 வீதமாகவும் நிலையான கடனுக்குரிய வட்டி 6.5 வீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடனுக்கான நிலையான வட்டி வீதம் அதிகரிக்கப்படுவதுடன், வங்கிகளின் வட்டி வீதம் 9.5 வீதமாக காணப்படுகின்றது.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலுமு, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
JITF
SPECIAL DISCOUNT 150,000/-
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலைத் தொழிற்சாலை
கோப்பித் தொழிற்சாலை
சுற்றுலா ஏற்பாடுகள்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல், இராணுவம் இரண்டுக்கும் பொதுவானதுதான். ஆனாலும் சில விதிகளுக்கு விலக்குகளும் உண்டல்லவா?

பிற நாடு எதனதும் உதவியின்றி இலங்கைத் தீவுக்குள் ஒரு வரையறுக்கப்பட்ட மட்டுப்படுத்தல்களோடு இயங்கும் கரந்தடிப் படையான விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள வேண்டும் என்றால் – அவர்களுக்கு முடிவுரை எழுத வேண்டும் என்றால் – புலிகள் மீது பல முனைகளில் யுத்தத்தை ஒரே சமயத்தில் கட்டவிழ்ப்பது அவசியம் என்று இராணுவத் தந்திரோபாயம் வகுத்தார் கோட்டாபய. அதில் வெற்றியும் கண்டார்.

ஆனால், அரசியலில் கற்றுக் குட்டியான அவர் அதே இராணுவத் தந்திரோபாயத்தை அரசியலிலும் கைக்கொண்டு மூக்குடைபட்டிருக்கின்றார் என்பதுதான் நிதர்சனம்.

இராணுவ யுத்தத்தில் அவர் பல போர் முனைகளைத் திறந்தது ஒரே எதிரிக்கு எதிராக.

ஆனால், அரசியலிலோ எதிரிகள் பலர். பல்வேறு வகையினர். நாட்டு நிர்வாகத்திலும் அப்படித்தான்.

ஒரு புறம் நாடு கொரோனா வைரஸுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கையில் – அதனால் நாட்டின் பொருளாதாரம் உட்பட சகல விடயங்களும் முடங்கிக் கிடக்கையில் – பசுமைப் புரட்சி என்ற பெயரில் சாத்தியமேயற்ற ஒரு கொள்கைக் கோட்பாட்டைப் பற்றிப் பிடித்தபடி நாட்டின் விவசாயத்துடன் ஒரு யுத்தமுனையைத் திறந்தார். இதன் விளைவாக அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்கு அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை என்பதில் தொடங்கி, காஸ் சிலிண்டர் வெடிப்பு அனர்த்தம் வரை பல சிக்கல்களை – பல புதிய, புதிய யுத்த முனைகளை – அவரே எதிர்கொண்டு, கடைசிக் காலத்தில் விடுதலைப் புலிகள் முகம் கொடுத்த மாதிரி நாலாபுறமும் அரசியல் துவந்த யுத்தத்தை சந்திக்க வேண்டியவரானார்.

இது போதாதென்று, நேரடி அரசியலிலும் பல யுத்த முனைகள். எதிரணி அரசியல் தரப்புகளிடமிருந்து மட்டுமல்ல, ஆட்சிக் கூட்டமைப்புக்கு உள்ளேயே துவந்த யுத்தம் ஆரம்பமாகி விட்டது. அவரது பொதுஜன பெரமுன கட்சிக்குள்ளிருந்தும் கூடச் சிக்கல். அத்தோடு பங்காளிக் கட்சிகளிடமிருந்தும் நெருக்கடி. வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ போன்றோர் ஒரு பக்கம் என்றால், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி மற்றப் பக்கத்தில் தலையிடி.

இப்போதுதான் அரசியலில் அரிச்சுவடி படிக்கத் தொடங்கியிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ, இராணுவத்தில் புலிகளுக்கு எதிராகச் செய்த மாதிரி ஒரே சமயத்தில் பல முனைகளில் யுத்தத்தைத் திறப்பது அரசியிலுக்குச் சரிப்பட்டு வராது என்பதை உணரத் தலைப்பட்டிருக்கின்றார்.

அதனால், இப்போதுதான் சரியான அரசியல்செய்யத்தொடங்கியிருக்கின்றார் அவர் என்கிறார் தென்னிலங்கை மூத்த ஊடகவியலாளர் ஒருவர்.

முதலில் ஆட்சிக் கூட்டமைப்புக்குள் அரசுத் தலைமைக்கு எதிராகக் கிளர்ந்திருக்கும் தரப்புகளை பிரித்தாளும் அரசியல் சாணக்கியத்தை அவர் முன்னெடுத்திருக்கின்றார் என அந்த ஊடகவியலாளர் கூறுகின்றார்.

ஆட்சித் தலைமையை எதிர்ப்பதைக் கூட்டாகக் கொண்டிருந்த வாசு – உதய கம்மன்பில்ல – வீரவன்ஸ தரப்புகளுக்கு இடையில் புகுந்து விளையாடியிருக்கின்றார். உதய கம்மன்பில்லவை அயல் சக்தி கையாள, கோட்டா தாமே விமலை அனுசரித்து, அரவணைத்திருக்கின்றார். அதனால் இந்த முத்தரப்புக் கூட்டின் எதிர்ப்பு பிசுபிசுத்து, அடங்குவதாக அந்த ஊடகவியலாளர் கூறினார்.

கொதித்துக் கொண்டு நிற்கும் சு.க. தலைமையையும் அதற்காகத் துண்டாடும் மற்றொரு கூட்டுச் சதியும் கட்டவிழ்கின்றதாம்.

அரசை விட்டு வெளியேறுவோம் எனக் கங்கணம் கட்டி நிற்கும் சு.க. தலைமை, இன்றைய நிலையில் அரசை விட்டு வெளியேறினால், ஏற்கனவே 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' நிலையில் இருக்கும் சு.க., மேலும் அரைக் கால்வாசி அளவுக்குத் தேய்ந்துதான் வெளியேற வேண்டியிருக்கும் என்றார் அந்த ஊடக நண்பர்.

மெல்ல, மெல்ல அரசியல் பாடம் படிக்கத் தொடங்கி விட்டார் போலும் கோட்டா...!

★ ★ ★

ஜனாதிபதி கோட்டாபயவின் பசுமைப் புரட்சி, நாட்டின் விவசாயத் துறையை நடுச் சந்திக்குக் கொண்டு வந்து விட்டிருக்கின்றது என்பது திண்ணம்.

இந்த முட்டாள்தனமான முடிவால் நாட்டின் உற்பத்தி அடியோடு படுத்து விட்டது. இனி என்ன? பிச்சைப் பாத்திரம் ஏந்த வேண்டியதுதான்.

சீனாவிடமிருந்து பத்து லட்சம் தொன் அரிசியை (சுமார் 35 கோடி டொலர் முதல் 50 கோடி டொலர் பெறுமதியை) நன்கொடையாகக் கோருகின்றது கொழும்பு.

டி.எஸ்.சேனநாயக்காவை நாட்டின் தந்தை என்கின்றார்கள். ஆனால் நாட்டில் உண்மையான பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட அவரின் மகன் டட்லி சேனநாயக்காவை, 'சோறு தந்த பிதா' என்று புகழ்ந்தார்கள் சிங்கள மக்கள். போகின்ற போக்கில் நாட்டு மக்களுக்கு 'சோறூட்டிய பிதா' என்ற பெயர் சீனப் பிரதமர் ஷி ஜின் பிங்கிற்குத்தான் இனிக் கிட்டும் போல...!

– மின்னல் –

---

## கமநல திணைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுடன் கலந்துரையாடினார் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

---

## யாழ்.சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை அது இன்று காலை 9.30 மணிக்கு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் ஏனைய விருந்தினர்களால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த சந்தை நாளை ஞாயிற்றுக் கிழமை வரை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதற்கு யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து எல்.ஈ.சி.எஸ். (LECS) நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள நிலையில் சர்வதேச வர்த்தக மன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் ஆகியன இதற்கு அனுசரணையும் அங்கீகாரமும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## டொலர் கிடைக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதிலிருந்தே அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும் எனவும் அவர் கூறினார்.

அர்ப்பணிப்புகளுக்கான முன்மாதிரியாக அரசியல் தலைவர்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வரையறுக்கப்பட்ட அந்நிய செலாவணியை வைத்துக்கொண்டே எரிபொருள் கொண்டுவரப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஏப்ரல் மாதம் மழை பெய்யும் வரை, எரிபொருளூடாகவே மின்னுற்பத்தியை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது எனவும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மேலும் கூறினார்.

---

## தென்கொரிய சபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாஸ ஆகியோர் வரவேற்றிருக்க வேண்டும். எனினும், எதிர்க்கட்சித் தலைவர் சபையில் இருக்காத காரணத்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்க, கொரிய சபாநாயகரை எதிர்க்கட்சி சார்பாக வரவேற்றார்.

அத்துடன், சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்திருந்த பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவிடம், நாடாளுமன்ற ஆசனங்கள் வெறுமையாக இருக்கின்றன எனவும், எம்.பிக்களை உடனடியாகச் சபைக்கு வருமாறு அழைப்பு விடுக்க வேண்டும் எனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இதன்பின்னர் ஒவ்வொரு எம்.பிக்களாக சபைக்கு வந்து அமர்ந்துள்ளனர்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 11.50 மணியளவில் தாயும், மகளும் தீயில் எரிந்து உருக்குலைந்த நிலையில் சடலங்களாகக் காணப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தர்மபுரம் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்தனர்.

தந்தையும், மகனும் குடும்பச் சுமை காரணமாக கூலி வேலைக்கு வெளிமாவட்டத்துக்குச் சென்ற வேளையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இது தற்கொலையா அல்லது கொலையா எனப் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

7 பிள்ளைகளின் தாயாரான ஆனந்தராசா சீதேவி, அவரது 17 வயது மகளான ஆனந்தராசா லக்சிகா ஆகியோரே இறந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தர்மபுரம் பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

---

## இஸ்லாம் மதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை சமர்ப்பிக்குமாறு தமக்கு அறிவிக்கப்பட்டது எனவும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அதற்கமைய, திணைக்களத்தினூடாக குழு ஒன்று நியமிக்கப்பட்டு, இஸ்லாம் பாடநூல்கள் பரிசீலிக்கப்பட்டன எனவும், இதன்போது விநியோகிக்கப்பட்டுள்ள பாடநூல்களை மீளப்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

06, 07, 08, 10, 11ஆம் தர மாணவர்களுக்கான இஸ்லாமிய பாடநூல்களையே திரும்பப் பெறுமாறும், இதுவரை பாடநூல்கள் விநியோகிக்காத மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்க வேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் பாடப் புத்தகங்களில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும், அதற்கான அனுமதியை கல்வி அமைச்சின் செயலாளரிடம் பெற்று, துரிதகதியில் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

---

## கூட்டணி அமைப்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

24 மணிநேரத்துக்குள் கூட்டணி அமைக்கும் தேவைப்பாடும் எமக்கு இல்லை. எதிர்கால ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தலை இலக்கு வைத்தே செயற்படுகின்றோம். எமது முயற்சி கைக்கூடும் – என்றார்.

---

## பொலிஸ் பேச்சா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

## வெறும் வாய்ச்சொல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறினார்.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணை இடம்பெறும்போதே அதில் சம்பந்தப்பட்டவருக்கு பதவி உயர்வு வழங்கப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோல், புதிய அரசமைப்பு குறித்து பேசும் ஜனாதிபதி தலைமையிலான அரசே, 20ஆவது திருத்தச் சட்டமூலம் சர்வாதிகார ஆட்சியை உருவாக்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அரசமைப்பை மாற்றி ஆட்சியாளர்களை உறுதிப்படுத்துவது அவசியமில்லை. மாறாக அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

எனவே, இந்த மாற்றத்தை மக்களே மாற்றியமைக்க வேண்டும் எனவும், புதிய அரசியல் பயணமொன்றை உருவாக்கினாலேயே இளம் சமூகத்திற்கு நன்மை கிடைக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எந்த நிறுவனமும் வழங்க முடியாத
விசேட கட்டணச் சலுகையில்!

HND
Computing
Business
Civil Engineering
புதிய பிரிவுகள் ஆரம்பம்
TVEC உத்தரவாதம் பெற்ற பயிற்சிநெறிகள்
மேலதிக விபரங்களுக்கு :071 777 4666 / 077 905 3923
கல்விப்பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச்சாம்ராஷ்யம்
IIS CITY CAMPUS
441 Clock Tower Road, Jaffna
TEL :- 021 222 8060


அதியுயர் ஜப்பான் தொழிநுட்பத்துடன்
நுண்ணுயிர்களை கொல்லக்கூடிய ஒரே பெயின்ட்
நிப்போனிடமிருந்து மட்டுமே..!
NIPPON
HEALTH CARE SOLUTIONS
NIPPON PAINT
MEDIFRESH 3in1
SILVER ZINC ION
Innovative Japanese Technology
சுற்றுச் சூழலுக்கு உகந்த பெயின்ட்
நீண்ட காலம் உழைக்கும்
அற்புதமான மறைக்கும் சக்தி
சிறந்த பூஞ்சைக் காப்பான்
விரைவாகக் காயும்
கறை, கொப்புளங்கள், உறிதல் என்பவற்றிலிருந்து பாதுகாப்பு
பயன்படுத்தச் சுலபமானது
லீட் அல்லது மெர்குரி சேர்க்கத் தேவையில்லை
Cover
hariline cracks
WATER PROOF
Water Proof
Washable
99%
Effective against
Bacteria
www. nipponpaint.lk
மெடிபிரஷ் 3 இன் 1
நிப்போன் தீய நுண்ணுயிர்களுக்கு எதிரான மெடிபிரஷ் பெயின்டானது தண்ணீரை ஊடுபுக விடாதது, கழுவக் கூடியது, நூலிழை வெடிப்புக்களை மறைக்கக் கூடியது. ஆரோக்கியத்தையும் சிறந்த சுகா தாரத்தையும் தரக்கூடிய வகையில் நீண்டு நிலைக்கக் கூடியது. சில்வர் அயன் மற்றும் சிங் அயன் ஆகிய சிறப்புக் கலவைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது. இந்தக் கலவை ஜப்பானின் உணவு ஆராய்ச்சி ஆய்வு கூடத்தில் பரிசோதித்து உறுதிப்படுத்தப்பட்டது.
ஈகோலி, எம்ஆர்எஸ்ஏ, ஸ்டேஃபிளோகோகஸ் ஆரியஸ் போன்ற ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய தீய நுண்ணுயிர்க ளின் வளர்ச்சியை, பெருக்கத்தைத் தடுக்கிறது. அதன் மூலம் நீங்கள் வாழும் சூழலைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்கிறது. அதனால் இந்தப் பெயின்ட் வீடுகள், வைத்தியசாலைகள், உணவுப் பாதுகாப்புப் பகுதிகள் ஆகியவற்றுக்கு மிகப் பொருத்தமானது.
Environmentally Friendly Paint
GREEN CHOICE
ISO
NIPPON PAINT LANKA (PVT) LTD
No.69A, Buthgamuwa Road,Rajagiriya,Sri Lanka.
Telephone : +94 114 600400 Fax : +94 114 600409
www.nipponpaint.lk
A product of ISO 9001 : 2015 certified company

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ். சர்வதேச வர்த்தக சந்தையில் நேற்று






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.01.2022இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# பங்களாதேஷ் கடற்படைத் தளபதியை சந்தித்தார் ஜெனரல் சவேந்திர சில்வா





நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த புதன்கிழமை பிற்பகல் இலங்கைக்கு வருகை தந்திருந்த பங்களாதேஷ் கடற்படைத் கடற்படைத் தளபதி அத்மிரல் எம். ஹீன் இக்பால், மரியாதை நிமித்தமாக பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தலைமையகத்தில் சந்தித்தார்.

வருகை தந்த தளபதியின் வாகனம் அணிவகுப்பு நுழைவாயிலை அடைந்ததைத் தொடர்ந்து அவருக்கு இராணுவக் கொடிகளுக்கு மத்தியில் சிவப்பு கம்பள வரவேற்பளிக்கப்பட்டதோடு, சீராண உடையணிந்த சிப்பாய்களால் இராணுவ சம்பிரதாயங்களுக்கமைவாக பாதுகாவலர் அறிக்கையிடல் மரியாதை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத் தலைமையக பட்டாலியன் கட்டளை அதிகாரி பிரிகேடியர் இந்திக்க பெரேரா வருகை தந்த தளபதிக்கு வரவேற்பளித்தார்.

அதனை அடுத்து, இராணுவத் தளபதியின் செயலக வளாகத்திற்கு வருகை தந்த பங்களாதேஷ் கடற்படைத் தளபதிக்கு இலங்கை இராணுவத்தின் நிறைவேற்று பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தீபால் புஸ்ஸல்லவால் சம்பிரதாயபூர்வமாக வரவேற்பளிக்கப்பட்டதோடு, அவருக்கான மரியாதை அணிவகுப்பும் நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வின் போது இலங்கை பீரங்கிப் படையணியின் வண்ணமயமான அணிவகுப்பு மரியாதை நிகழ்வு வருகை தந்த தளபதிக்கு சிறப்பு கௌரவத்தை அளிப்பதாக அமைந்திருந்தது.

அதனை அடுத்து கெப்டன் ஈடிகே எதிரிவீரவின் தலைமையின் கீழ் வழங்கப்பட்ட அணிவகுப்பு மரியாதைக்கு மத்தியில் நிறைவேற்று பணிப்பாளர் நாயகத்தால் மரியாதை ஏற்பதற்கான மேடைக்கு தளபதி அழைத்துச் செல்லப்பட்டார்.

அதனையடுத்து இராணுவத் தளபதியின் செயலக வளாகத்தில் பங்களாதேஷ் கடற்படைத் தளபதிக்கு பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் வரவேற்பளிக்கப்பட்டதோடு, இராணுவத் தலைமையகத்துக்கு வருகை தந்த கடற்படைத் தளபதிக்கு தலைமையகத்தின் முதன்மைப் பதவி நிலை அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளையும் அறிமுகப் படுத்தினார்.

புதிய இராணுவத் தலைமையகத்துக்கு வருகை தந்ததன் நினைவம்சமாக இராணுவத் தலைமையகத்தின் அனைத்து முதன்மை பதவி நிலை அதிகாரிகளுடன் குழு புகைப்படம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இராணுவத் தளபதியின் அலுவலகத்தில் நடைபெற்ற மேற்படி சந்திப்பின் போது, பங்களாதேஷ் கடற்படைத் தளபதி அத்மிரல் எம் ஷாஹீன் இக்பால் மற்றும் பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான, ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர், தற்போதைய கடல்சார் பிரச்சினைகள், இரு நாடுகளுக்கும் பொதுவான விடயங்கள், உலக அளவிலாள மாற்றங்கள், கடற்படையின் செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

ஜெனரல் வேந்திர சில்வா, பங்களாதேஷ் கடற்படைத் தளபதியின் இலங்கை விஜயம் மற்றும் இராணுவத் தலைமையகத்துக்கு வருகை தந்தமைக்காக நன்றி தெரிவித்ததுடன், பிராந்தியத்தில் உள்ள அண்மைய நாடு என்ற வகையில் ஆயுதப் படைகளுக்கு வழங்கும் ஒத்துழைப்புக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அதனை அடுத்து இராணுவத் தலைமையகத்துக்கான தனது முதலாவது விஜயத்தை மேற்கொண்டிருந்த பங்களாதேஷ் கடற்படை தளபதி அத்மிரால் எம் ஹீன் இக்பாலுக்கு ஜெனரல் சவேந்திர சில்வாவின் விடே நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

## கலைக்கப்பட்ட தெரிவுக்குழுக்களில் பெறப்பட்ட சாட்சி செல்லுபடியாகுமா?

### லக்ஸ்மன் கிரியெல்ல கேள்வி



நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 115 இன் ஏற்பாடுகள் மற்றும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைய நாடாளுமன்ற அலுவல் கள் பற்றிய குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களை சபாநாயகர் நியமித்தார்.

இதன்போது கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல, கலைக்கப்பட்ட தெரிவுக்குழுக்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட சாட்சிகள் புதிய தெரிவுக் குழுக் களில் செல்லுபடியாகுமா? அதனை செல்லுபடியாக்குமாறு அறிவிப்பொன்றை விடுக்குமாறு சபாநா யகரை வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் வியாழக்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய வேளையில், நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 115 இன் ஏற்பாடுகள் மற்றும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேர ணைக்கு அமைய நாடாளுன்ற அலுவல்கள் பற்றிய குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள உறுப் பினர்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இதற்கமைய சபாநாயகர் இதன் தவிசாளராக நியமிக்கப்படுகின்றமையுடன், பிரதிச்சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், நாடாளுமன்ற சபை முதல்வர், நாடாளுமன்ற எதிர்க்கட்சியின் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலா சான் உட்பட மேலும் 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் எனக்கூறியமையுடன் 20 உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் அறிவித்திருந்த துடன், மற்றுமோர் உறுப்பினரின் பெயர் எதிர்வரும் நாள் களில் அறிவிக்கப்படும் எனவும் கூறினார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல -கலைக்கப்பட்ட தெரிவுக்குழுக்களில் முன்னர் எடுத்துக்கொள்ளப்பட்ட சாட்சிகள் புதிய தெரிவுக்குழுக்களில் செல்லுபடியாகுமா? அவ்வாறு இருக்கும் என நம்புகின்றேன். - என்றார். இதற்கு பதில் தெரிவித்த சபாநாயகர்-

தெரிவுகுக்குழுக்களுக்கு அது குறித்து தீர்மானம் எடுக்க முடியும். - என்றார்.

கிரியெல்ல : நாடாளுமன்றம் ஒத்திவைக்க முன்னர் எடுக்கப்பட்ட சாட்சியங்கள் அனைத்துமே இல்லாது போகும் என்ற கருத்தொன்று உள்ளது. எனவே, இது தொடர்பில் நீங்கள் அறி விப்பொன்றை விடுப்பது நல்லதென்றே நான் கருது கின்றேன். சீனி ஊழல் தொடர்பில் சாட்சியங்கள் உள்ளன, இப்போது அவை நீக்கப்படுமா என்பதே எனது கேள்வி, ஆகவே, தெரிவுக்குழுக்கள் கலைக்கப்பட முன்னர் வழங்கப்பட்ட சாட்சியங்கள் செல்லுபடியாகும் என்ற தீர்மானத்தை வழங்குங்கள். - என்றார்.

## ஹிஸ்புல்லா மீதான வழக்கு ஜனவரி 28 இல் விசாரணைக்கு!

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் பிணை மனுவை எதிர்க்கப் போவதில்லை என சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தன்னைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி சட்டத்தரணி சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வியாழக்கிழமை மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ன சில்வா இதனைத் தெரிவித்தார்.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி 28 ஆம் திகதி புத்தளம் மேல் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் சீராய்வு மனுவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## தங்க மகன் தினேஷுக்கு புதிய வீடு அன்பளிப்பு!



டோக்கியோவில் நடைபெற்ற பராலிம்பில் 2020 ஈட்டி எறிதல் போட்டியில் புதிய உலக சாதனையை நிலைநாட்டி இலங்கைக்குத் தங்கப் பதக்கம் வென்றுகொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ புதிய வீடொன்றை அன்பளிப்பாக வழங்கினார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலையீட்டின் கீழ் பெற்றுக்கொடுக்கப்பட்ட இந்த வீட்டுக்கான அன்பளிப்பு பத்திரம் பிரதமரால் தங்கப் பதக்கம் வென்ற வீரர் தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு அலரி மாளிகையில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது.

உலக சாதனையை நிலைநாட்டி இலங்கைக்குத் தங்கப் பதக்கம் வென்றுகொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு புதிய வீடொன்றை பெற்றுக்கொடுக்குமாறு கடந்த ஆண்டு செப்ரெம்பர் 08 ஆம் திகதி பிரதமர் குறிப்பிட்டிருந்தமைக்கு அமைய அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்கமைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய கொழும்பு 02 கொம்பனித்தெருவில் அமைந்துள்ள மெட்ரோ ஹோம்ஸ் வீடமைப்பு திட்டத்தின் வீடு தினேஷ் பிரியந்த ஹேரத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

தற்போது இலங்கையில் பரா வீர வீராங்கனைகளின் திறமை உயர் மட்டத்தில் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, எதிர்காலத்தில் தேசிய விளையாட்டு போட்டியில் பரா விளையாட்டுகளையும் சேர்க்கும் யோசனை குறித்து பிரதமருக்கு விளக்கமளித்தார்.

பரா வீர வீராங்கனைகளின் திறமையை வெளிக்கொணர்வதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிப்பது பாராட்டுக்குரிய விடயமாகும் என பிரதமர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அனுராத விஜேகோன், விளையாட்டு மேம்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரிய, பராலிம்பிக் குழுவின் தலைவர் லெப்டினன் கேர்னல் தீபால் ஹேரத், பராலிம்பிக் குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் அம்பேமொஹொட்டி, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் (காணி) அனுர பிரசன்ன, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் (வீடு) ரத்ன குமார மற்றும் தேசிய விளையாட்டு சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து காரைநகரில் போராட்டம்

## கோட்டாவுக்கும், டக்ளஸுக்கும் மகஜர்





(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்தும், அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும் காரைநகர் பிரதேச கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கமும், யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தன.

காரைநகர் பிரதேச சபையின் முன்பாக காலை போராட்டத்தை முன்னெடுத்த மீனவர்கள், பின்னர் அங்கிருந்து பிரதேச செயலகம் வரையில் பேரணியாகச் சென்றனர்.

பிரதேச செயலகத்துக்குப் பேரணியாகச் சென்ற மீனவர்கள் பிரதேச செயலகம் ஊடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கான மகஜர்களையும் கையளித்தனர்.

போராட்டக்காரர்கள் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் –

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் கட்டுக்கடங்காமல் செல்வதால் எமது கடல் வளங்களும், கடல் சூழலும், எமது உபகரணங்கள், வாழ்வாதாரங்கள் என்பன அழிக்கப்படுகின்றன.

அதனால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகச் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். பல போராட் டங்களை முன்னெடுத்திருந்தோம். பல தரப்புக்களிடமும் மகஜர்களைக் கையளித்திருந்தோம். இருந்தும் இன்று வரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை .

வெளிநாட்டு மீனவர்கள் ஒழுங்கப்படுத்தல் தடைச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும், உள்ளூர் இழு வைமடி தொழில் சட்டத்தை நடைமுறைப் படுத்தல் வேண்டும், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் அழிக் கப்பட்ட எமது தொழில் உபகரணங்களின் மதிப்புகள் பல கோடி ரூபா. அதற்கான நட்டஈடுகளைப் பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம்.

மலர்ந்துள்ள இந்த வருடத்துக்குள் எமக்குத் தீர்வைப் பெற்றுத்தர சகல தரப் பினர்களும் முயற்சிகளை முன்னெடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், கடல் வளத்தையும் பாதுகாத்து எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றனர்.

# முதலில் கோட்டாவின் மனம் மாறவேண்டும்

## அப்போதுதான் பிரச்சினைகள் தீரும் என்கிறார் சிறிதரன் எம்.பி.



தான் இன்னமும் இராணுவ சிந்தனை வாதத்துக்குள்தான் இருக்கிறார் என்பதையும், நீதியான, நியாயமான வழியில் செல்வதற்குத் தயாரில்லை என்பதையுமே கொள்கை விளக்க உரைமூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிப்படுத் தியுள்ளார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சுட் டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2019 நவம்பர் 18ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவின்போது ஜனாதிபதி உரையாற்றியிருந்தார். அதன்பின்னர் 2019 நவம்பர் 30 ஆம் திகதி இந்தியாவுக்குச் சென்று திரும்பும்வேளை இந்து நாளிதழுக்கு நேர்காணலொன்றை வழங்கியிருந்தார். 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி கொள்கை விளக்க உரையாற்றினார். 2022 ஜனவரி 18ஆம் திகதி 9 ஆவது நாடாளுமன்றத்தின் 2ஆவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரையாற்றினார்.

அன்று முதல் இன்றுவரை அவரின் உரைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்தோம். இந்நாட்டில் பல்லின மக்கள் வாழ்கின்றனர் என்பதையும், தமிழர்கள் என்கிற தேசிய இனத்தின் அடிப் படை அபிலாஷைகளையும் அவர் தூக்கி கடாசிவிடும் வகையிலேயே செயற்பட்டுள்ளார். குறிப்பாக தன்னுடைய மனதில்கூட அதனை சொல்ல முடியாத தலைவரா கவே அவர் இருக்கின்றார்.

ஒரு நாட்டின் ஜனாதிபதியின் உரையொன்பது, அனைவரையும் அரவணைத்து, ஒன்றிணைக்கும் வகையில் அமைய வேண்டும். ஆனால், ஒரு தலைவனின் உரையாக ஜனாதிபதியின் உரை அமையவில்லை. தன்னுடைய இராணுவ சிந்தனை வாதத்துக்குள், தான் வைத்திருந்த துப்பாக்கி முனைக்குள் மட்டும்தான் தன்னுடைய சிந்தனை இருப்பதாகவே அவரது பேச்சு அமைந் துள்ளது.

அதாவது நீதியான – நியாயமான வழியில் செல்வதைற்கு தயாரில்லை என்பதைத்தான் அவரது உரை குறிப்பி டுகின்றது. இந்நாடு சீரான பாதையில் நேர்த்தியாக செல்ல வேண்டுமானால், இனப்பிரச்சினை தீரவேண்டுமானால் தன்னுடைய மனதை ஜனாதிபதி முதலில் மாற்றிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாட்டின் இறைமையும், மக்களின் வாழ்க்கையும் பொருளாதாரமும் மேம்படும் என்றார்.

# சு.க. பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## அமைச்சர் நாமல் வலியுறுத்து

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

உள் விவகாரங்கள் ஏதேனும் இருந்தால், அவை அமைச்சரவைக் கூட்டத்திலோ, அரச கட்சிக் கூட்டத்திலோ அல்லது கட்சித் தலைவர்கள் கூட்டத்திலோ மட்டுமே விவாதிக்கப்பட வேண்டும் என்று அரசியல் தலைமைகள் கவனத்தில்கொள்ள வேண்டும் - என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இல்லாமல் தற்போதைய நிர்வாகம் முன்னோக்கிச் செல்ல முடியுமா என ஊடகவியலாளர்கள் வினவியபோது, தனிநபர்கள் ஆட்சி செய்வதற்காகப் பொது மக்கள் வாக்களிக் கவில்லை என்றும், தெரிவுசெய்யப்பட்ட அரச தலைவரின் கொள்கைகளை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அமைச்சர் நாமல் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொறுப்புடன் செயற்படுமாயின் பிரஜைகள் அறிவார்கள் என்று தெரிவித்த அவர், அரச அரசியல்வாதிகள் என்ற வகையில் கருத்துக் கூறுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு என்றும் சுட்டிக்காட்டினார்.

## இன்று புலமைப்பரிசில் பரீட்சை!

# கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள மாணவர்களுக்கு விசேட நிலையங்கள்

இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில், கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள பரீட்சார்த் திகளுக்கு விசேட நிலையமொன்றில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவர்களுக்காக நாடளாவிய ரீதியில் விசேட பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளரான அமித் ஜயசுந்தர கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது தெரிவித்தார்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலையில் விடுவதும், பாடசாலை மாணவர்களை தேர்வு மையத்திற்கு அழைத்துச் செல்வதும் பொதுவான செயல்முறையாகும் என்றும் அவர் கூறி னார்.

எவ்வாறாயினும், மாணவர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தால், அவர்களின் பெற்றோர் அவர்களை விசேட தேர்வுமையங்களுக்கு அழைத்துச்செல்ல வேண்டும்.

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்துக்குச் சென்று பெற்றோர்கள் விசேட நிலையங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மாணவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருப்பின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அவர்கள் அன்டிஜன் சோதனை அல்லது பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், மாணவர்கள் கொரோனாத் தொற்றாளர்களாக சந்தேகிக்கப்பட்டாலும், நேர்மறைசோதனை செய்யவில்லை என்றால், விசேட மையங்களுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்வதைத் தவிர்க்குமாறு பெற்றோரிடம் கேட்டுக் கொண்டார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 259

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**663.மேற்கொண்டு ஆணைக் குழுவில் நடந்தவை என்ன?**

கொழும்பில் நடக்கவிருந்த அமர்வுகளோடு சாட்சியங்கள் முடிந்து, மேல் தர வேண்டிய தொகுப்பு சமர்ப்பணங்களோடு ஆணையாளர் அவற்றை ஆராய்ந்து அறிக்கை தருவதான ஏற்பாடுதான் இருந்தது. ஆனால் ஆணையம் தனது அமர்வுகளைத் தொடங்கி ஆறுமாதத்திற்கு மேலும் 600 இற்கு மேலான சாட்சியங்களை விசாரித்த பின் (அவர்களில் 90 வீதம் தமிழ் மக்கள்) முன்னர் கொடுக்



மடிகே பஞ்ஞாசீல தேரர்

கப்பட்ட காலக்கெடுக்களின் அடிப்படையில் சமர்ப்பணங்கள் தமிழ் தரப்புக்களினால் முன்வைக்கப்பட, மற்றவர்கள் (சிங்கள, பௌத்த அமைப்புக்களோ, பொலிஸ் ஆணையாளரோ) கையளிக்காத நிலையில் ஆணைக்குழுவின் விசாரணைக் காலத்தையும் அறிக்கை தர வேண்டிய திகதியையும் ஜனாதிபதி நீடித்து அறிவிப்புக்கள் தந்தார். ஆணைக்குழு அதற்குத் தேவையானமேலானசாட்சியங்களையும் ஆய்வுகளையும் மேற்கொண்டு அவற்றையும் அறிக்கையில் உள்ளடக்கலாம் என்ற செய்தியும் இருந்தது.

7 ஆகஸ்ட் 1978 கொழும்பில் விசாரணைகள் தொடங்கிய பொழுது பல சிங்கள, பௌத்த அமைப்புக்கள் சமர்ப்பணங்களுடன் ஆணையத்தின் முன் ஆஜராகின.

ஹரிஸ்சந்திரா விஜயதுங்க, பேர்ஸி கருணாரத்னா, டபிள்யூ.பி.குணதிலகா, வால்டர் விமலசந்திர போன்ற பலரும் ஸ்ரீலங்கா பௌத்த பெரமுனை, சிங்கள மகா பெரமுனை, சிங்கள தருண பெரமுனை போன்றவைக்கு சட்டத்தரணிகளானார்கள். அவர்களின் பின்னால் மடிகே பஞ்ஞாசீல தேரர் மகா நாயக்க தேரர், பொலிஸ்சாட்சிகள், அவர்களுக்காகப் பண்டி செய்சா ஆகியோர் இருந்தார்.

நீங்கள் எதை ஊகிக்கிறீர்களோ அதுதான் தொடர்ந்தது.

அறிவு பூர்வமாகவும் யதார்த்தத்திலும் புத்திசாலித்தனத்திலும் இணைந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தம் பௌத்த குருமாரை ஏவிவிட்டுப் பாழாக்கப்பட்டதோ, அதே போல இனப் பிரச்சினையில் முக்கிய காரணிகள் அறியப்பட்டு, முடியும் வேளையில் திருகோணமலையில் சேருவில மடாதிபதியைப் பாவித்து சிங்களவருக்குத் துரோகம் நடக்கிறது என ஊடகங்கள் கூவி இப்பொழுது ஆணையத்தின் பெறுமதியும் ஆப்பு வைக்கப்பட்டது.

ஆணையம் நாட்டில் 14 ஆகஸ்ட் 1977 முதல் 15 செப்டம்பர் 1977 வரையான காலப்பகுதிக்கு இடையில் நடந்த வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களை அறிந்து, அதற்கு காரணமாயிருந்தவைகளையும் காரணகர்த்தாக்களையும் தெரியப்படுத்தவும், அப்படியான சம்பவங்கள் மீண்டும் நிகழாமலிருப்பதற்கான வழிவகைகளை ஆராயவுமே அமைக்கப்பட்டது. ஆனால் இப்பொழுதோ அந்தக் காலங்கள் எல்லாம் தூக்கி வீசப்பட்டு, பொலிஸாரும், சிங்கள, பௌத்த அமைப்புக்களும் 1970 ஆண்டிலிருந்து தமிழ் பகுதிகளில் நடந்த குற்றச்



ஹரிஸ் சந்திர விஜேதுங்க

செயல்கள், அவற்றுக்குப் பின்னணியில் நடந்த புலனாய்வுகள் சம்பந்தப்பட்டவர்கள் என்ற விடயங்களை முன் வைத்து, இவையும் காரணங்களுக்காக விசாரிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டனர்.

பாதிக்கப்பட்ட மனுதாரர்களுக்கு இப்படியான புதிய, தலைகீழான கால எல்லைகள் மாறிய சமர்ப்பணங்களும், சாட்சியங்களும் எவ்வளவு பாதிப்பானவை என சட்டத்தரணிகளுக்கும் சட்டவாளர்க



டபிள்யூ.பி.குணதிலக

ளுக்கும் புரியும்.

ஆனால் பொலிஸ் அதிகாரிகள் தங்கள் சாட்சியங்களில் இவற்றையே மீண்டும் மீண்டும் எடுத்தார்கள். சில சம்பவங்கள் புரையோடிப் போனவை. அரசியலுக்காக பாவிக்கப்பட்டவை. ஏனெனில் அந்தக் குற்றம் சாட்டப்பட்ட வழக்குகளில் எதிராளிகள் யாபேரும் விடுதலை செய்யப்பட்டவர்கள். அந்த விவரங்களும் குற்றச் செயல்களாகத் தரப்பட்டன. இவற்றை எதிர்த்து வாதிடப்பட்டும் அவை சாட்சியங்களாகின. ஏதோ ஒரு வழியில் நியாயப்படுத்தப்பட்டாலும் கூட, இங்கே தான் தமிழ் மக்கள் ஏமாற்றமடைந்தார்களோ என்ற கேள்விக்கு வருவோம்.

தமிழ் மக்கள் பொலிஸார்தான் எல்லாவற்றுக்கும் காரணம் எனக் கண்டறியப்படும் என எண்ணினார்கள். ஆனால் தாங்கள் செய்த நடவடிக்கைகளால் – அரசியலால் – அது மறுபுறத்திலிருந்தும் பார்க்கப்படும் என்பதை மறந்து விடுகிறார்கள். தமிழ் பகுதிகளில் தங்களை மீறி யாரும் செயல்பட முடியாது என்று இறுமாப்பாக நம்பினார்கள். ஆனால் வெளிப்படையாக நடந்த பொலிஸ், பாதுகாப்புப் படைகளின் அராஜகங்களைத் தவிர, புலனாய்வின் மூலம் வலைகள் விரிக்கப்பட்டதை அவர்கள் தெரிந்தும் அக்கறை கொள்ளவில்லை.

சுயாட்சியை ஆணையாளர் ஏற்றுக்கொண்டு பரிந்துரைப்பார் என அவர்கள் எண்ணினார்கள். அதில் அவர்களுக்கு ஏமாற்றமிருந்தது. வலுவான அரசியல் போராட்டங்களும், அதற்கான வழிமுறைகளும், தலைமைகளுமின்றி இவற்றை நீதிமன்றத்தின் மூலம் பெற்றுவிடலாம் என்று கறுப்புகோட்டு அரசியல் சித்தாந்தம்தான் அப்படியான எதிர்பார்ப்புக்களை விதைத்தது.

**664.ஆணையாளர் சன்சோனியின் பரிந்துரைகள் எவ்வாறாக இருந்தன?**

அவரது மிக பிரபலமானதும் பரப்புரைக்கப்பட்டதும் –

“1977 இல் இனக்கலவரங்கள் சிங்கள மக்களின் ஒரு பகுதியினால், தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் தனிநாடு கோருகிறார்கள் என்பதற்காகவும் அதற்காக அவர்கள் வன்முறையாளரை வளர்த்து ஆதரிக்கிறார்கள் என்பதினாலுமே நடந்தது. நாட்டின் பெரும்பான்மை மக்களைப் பொறுத்த மட்டில் தனிநாட்டுக் கோரிக்கை நாடளவு ரீதியில் பிரபலமானதாகவோ அல்லது புரிந்து கொள்ளப்பட்டதாகவோ இல்லை. ஆகவே சிங்களப் பெரும்பான்மை மக்கள் அதனை எதிர்ப்பார்கள் என்பது அறியப்பட்டதாகும். அதே சமயத்தில் வன்முறை, வன்முறையைப் பலனாகத் திருப்பித் தரும் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். 1977 இல் கலவரங்கள் ஒன்றை உணர்த்துவதானால் அல்லது ஒரு பாடத்தைத் தருவதானால் அது இதனைத்தான் எல்லோருக்கும் படிப்பித்துள்ளது.” – என்பதாகும்.

சாட்சியங்கள் போதுமானவையாக இல்லை என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் எதிர்பார்த்து நம்பியிருந்த பல சம்பவங்களில் தீர்மானமான கருத்துக்கள் தரப்படவில்லை. ஆயினும் வன்முறை யாழ்ப்பாணத்திலிருந்த மற்றைய பகுதிகளுக்குப் பரவியதற்கு பொலிஸார் தூண்டுதலாக இருந்திருக்கிறார்கள், பல பொலிஸ் அதிகாரிகள் இவை நடப்பதைத் தவிர்க்க ஏதும் செய்யாதமையால், தங்கள் கடமைகளிலிருந்து தவறினார்கள், அதேசமயம் சிலர் நேரடிப் பங்கெடுத்து அவற்றுக்கு ஊக்கம் கொடுத்தார்கள் என்று அவர்களை அடையாளப்படுத்தி, அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

அத்தோடு நிதியத்தின் மூலம் சமர்ப்பணங்கள் செய்த மற்றும் தங்களது அழிவுகளை நியாயப்படுத்தியோர் எல்லாருக்கும் நட்ட ஈடு தரப்பட வேண்டும் என்ற பரிந்துரைகளும் இருந்தன. எனினும் இப்படியான ஒரு கருத்தால் ஆணையாளர் சன்சோனி புதிய நீதித்துறை முன்மாதிரியை (Judicial Precedent) எழுப்புகிறார் என்பதில் நிதியத்துக்கும் அவர்களது சட்டத்தரணிகளுக்கும் இருந்தது. ஏன் பொதுவாக சர்வதேச சட்டவாளர்களுக்கும் கூட இருந்தது. அதாவது ஒரு சிறுபான்மையினரின் அரசியல் கோரிக்கைகள் பெரும்பான்மைக்கு ஏற்றவாறு இல்லையாயின் அந்தக் கோரிக்கைகள் அவர்களால் வரவேற்பற்று வெறுக்கப்பட்டால், பெரும்பான்மை இனம் சிறுபான்மைக்கு எதிராக



பேர்ஸி கருணாரத்ன

வன்முறையைப் பாவிக்கும். சுருக்கமாகக் கூறுவதானால் சிறுபான்மை பெரும்பான்மையைச் சீண்டினால் அவர்கள் திருப்பி அடிப்பார்கள்தானே என்ற கூற்றுக்கு நியாயம் கற்பிக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழ் பகுதிகளில் தொடர்ந்த வன்முறைப் போராட்டம், பயங்கரவாத தடைச் சட்டத்தின் அமுலாக்கம், அதன் அட்டூழியங்கள் யாவும் சேர்ந்து 1983 இல் இனக்கலவரத்தைத் தோற்றுவித்தன. அதன் பின்னணிகள் பற்றிப் பேசியுள்ளோம். ஆகவே அவை முள்ளிவாய்க்காலுக்கு வகுத்த இடைப்பாதையை ஆராய வேண்டியதில்லை.

(வளரும்)

